

முதலமைச்சர் மு.க.ஸ்டா அவர்களின் ஆணைக்கிணங்க வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி திருக்கோவிலூர் சட்டமன்ற தொகுதி, கண்டாச்சிபுரம் ஊராட்சியில் இந்திரா நகர், மடவிலாகம் பகுதி நியாய விலைக் கடைகளில் அரசு நிவாரண தொகை ரூ. 2000 மற்றும், அரிசி, மளிகை பொருட்கள், பிரட், பிஸ்கட் உள்ளிட்ட நிவாரண பொருட்களை வழங்கும் நிகழ்ச்சியை துவக்கி வைத்தார். மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்ட துணை செயலாளர் தயா இளந்திரையன், ஒன்றிய செயலாளர் ஜி.ரவிச்சந்திரன், டாக்டர் மூர்த்தி, ஊராட்சி மன்றத் தலைவர் கண்டாச்சிபுரம் ரவிக்குமார், நெசவாளர் துணை அமைப்பாளர் இளஞ்செழியன், துணைத் தலைவர் ஜீவா, ஒன்றிய குழு உறுப்பினர் மீனா குமார் ஏழுமலை, ஊராட்சி மன்றத் தலைவர் கனகா பழனி, கிளைச் செயலாளர்கள் தேவசேனாதிபதி, ஏழுமலை, செல்ல பெருமாள், தகவல் தொழில்நுட்ப அணி ப.அன்பரசு, திருநாவுக்கரசு, நெசவாளர் அணி நடராஜன், சுற்றுச் சூழல் அணி பிரபு , விநாயகம், செல்வம் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.



கழக தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் வருகிற டிசம்பர் 19ம் தேதி ஈரோடு மாவட்டத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள வருகை தரவுள்ளார். சோலாரில் அரசு விழா நடைபெறும் இடத்தை மாவட்டக் கழகச் செயலாளரும், அமைச்சருமான சு.முத்துசாமி பார்வையிட்டு ஆய்வு செய்து அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார். நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜகோபால் சுன்கரா, காவல் கண்காணிப்பாளர் ஜவகர், மாநகராட்சி ஆணையாளர் மனிஷ், பொறியாளர் விஜயகுமார், கழக நெசவாளர் அணி செயலாளர் எஸ்.எல்.டி.ப.சச்சிதானனந்தம், , ஆ.செந்தில்குமார், கே.பி.சாமி, உள்ளிட்ட அரசு அதிகாரிகள், கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

## தமிழ்நாட்டின் உரிமைகள் – நலன்களுக்காக

# நாடாளுமன்றத்தில் நாள்தோறும் குரல் எழுப்பும் கழக எம்.பி.க்கள்!

## தொடர் கேள்விக் கணைகளால் திணறுகிறது ஒன்றிய அரசு!

**1. பிரதமரின் அனைவருக்கும் வீடு திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டிற்கு ஒதுக்கப்பட்ட வீடுகள் எத்தனை?**

**மத்திய சென்னை எம்.பி. தயாநிதி மாறன் கேள்வி!**




பிரதமரின் அனைவருக்கும் வீடு(PMAYU ) திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டிற்கு ஒதுக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை, அவற்றிற்கு ஒதுக்கப்பட்ட நிதி போன்ற விவரங்களை ஒன்றிய அரசு வெளியிட வேண்டும் என திமுக எம்.பி. தயாநிதி மாறன் மக்களவையில் கேட்டுள்ளார்.

தற்போது நிலுவையில் உள்ள கட்டுமானங்களை முடிக்க அரசு நிர்ணயித்திருக்கும் காலக்கெடு மற்றும் பெரும்பாலும் அதிக பொருளாதாரச் சவால்களை எதிர்கொள்ளும் கிராமப் புறங்களில் குறைவான நிதி வழங்குவதற்கான காரணங்களை வெளியிட வேண்டும்.

கனமழையில் அதிக பாதிப்புள்ளாகும் பகுதிகளில் பேரிடர்களைத் தாங்கும் வீடுகளைக் கட்டுவதற்காக கூடுதல் நிதி வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதேபோல் வீட்டுகளின் தரத்தை உறுதிசெய்வதற்கான வழிமுறைகளையும் வெளியிட வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

**2. நீதித்துறை நடவடிக்கைகளை மொழிபெயர்க்க AIஐ பயன்படுத்த கோரிக்கை!**

**தென் சென்னை திமுக எம்.பி. தமிழச்சி தங்கபாண்டியன்**



உச்ச நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்றங்களின் நடவடிக்கைகள் மற்றும் தீர்ப்புகளை செயற்கை நுண்ணறிவு (AI) மூலம் மொழிபெயர்த்து அவற்றை வெளியிடுவதற்கு அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும் அதற்காக ஒதுக்கப்படும் நிதியின் அளவை வெளியிட வேண்டும், மொழிப்பெயர்ப்புத்துறையில் புதிதாக உருவாக்கப்படும் பணியிடங்கள் SC/ST/OBC மற்றும் சிறுபான்மை சமூகங்களின் இடஒதுக்கீட்டுமுறையில் நிரப்ப வேண்டும் போன்ற கோரிக்கைகளை மக்களவையில் தென் சென்னை எம்.பி. தமிழச்சி தங்க பாண்டியன் வைத்துள்ளார்.

**3. தொடரும் இந்தியர்களின் ஆதார், பாஸ்போர்ட் டேட்டா திருட்டு**

**தி.மு.க. எம்.பி. பி. வில்சன் குற்றச்சாட்டு!**



இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சிலில் (ICMR) இருந்து 81.5 கோடி இந்தியர்களின் ஆதார் மற்றும் பாஸ்போர்ட் விவரங்கள் உட்பட தனிப்பட்ட தகவல்கள் டார்க் வெப் எனப்படும் ரகசிய இணையதளத்திற்கு விற்கப்படுகிறது என அமெரிக்க சைபர் செக்யூரிட்டி நிறுவனம் குற்றம்சாட்டி இருக்கின்றது. ஒன்றிய அரசு இக்குற்றச்சாட்டிற்கு உடனடியாக பதிலளிக்க வேண்டும். மேலும் கடந்த ஐந்து ஆண்டுகளில் பதிவான மொத்த தரவு கசிவுகளின் விவரங்களையும் வெளியிட வேண்டும் என திமுக மாநிலங்களவை உறுப்பினர் பி. வில்சன் கேட்டுள்ளார்.

**ஜவுளித்துறையின் கச்சா பொருட்களின் விலையை குறைத்திடுக!**

**வில்சன் கோரிக்கை**


இந்திய ஜவுளித்துறை 2030ஆம் ஆண்டுக்குள் 350 பில்லியன் டாலர் எனும் இலக்கை அடைய மலிவான விலையில் கச்சா பொருட்கள் கிடைத்திட ஏற்பாடுகள் செய்திட வேண்டும் என ஒன்றிய அரசிடம் திமுக மாநிலங்களவை உறுப்பினர் பி. வில்சன் கோரியுள்ளார்.

பருத்திக் கழிவுகள் உட்பட அனைத்து வகையான பருத்தி இறக்குமதி மீதான வரிகளை அரசு நீக்கிட வேண்டும், ஜவுளித்துறைக்கான மூலப்பொருட்கள் எல்லோருக்கும் மலிவு விலையில் எளிதாக கிடைப்பதை உறுதி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும், சிறப்பு பருத்தி விதை வகைகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் பருத்தி உற்பத்தித்திறனை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

**4. விவசாயிகள் கடனில் தத்தளிக்கையில் கார்ப்பரேட்களின் கடன்களை தள்ளுபடி செய்யும் விவசாய விரோத ஒன்றிய அரசு!**

**தென்காசி எம்.பி. டாக்டர். ராணி ஸ்ரீகுமார் காட்டம்**

வங்கி சட்டங்கள் (திருத்தம்) மசோதா 2024இல் உள்ள குறைகளை சுட்டிக்காட்டி தென்காசி தொகுதி எம்.பி. டாக்டர். ராணி ஸ்ரீகுமார் மக்களவையில் ஆற்றிய உரை:



மக்களவையில் ஒன்றிய அரசு அளித்த பதில்களின் படி, கடந்த 10 ஆண்டுகளில் சுமார் ரூ. 16.26 லட்சம் கோடி வங்கிக் கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன.

அவற்றில் பெரிய கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு தள்ளுபடி செய்யப்பட்ட கடன்கள் ரூ. 7.4 லட்சம் கோடி. பொதுத்துறை வங்கிகளின் வருடாந்திர தள்ளுபடிகள் 2013ல் ஆண்டுக்கு ரூ.7,187 கோடியில் இருந்து 2023ல் சுமார் 1.2 லட்சம் கோடியாக அதிகரித்துள்ளது.

வங்கிகள் கடன் தள்ளுபடி செய்வது வழக்கமான நடவடிக்கையின் ஒரு பகுதியாகும் என்று கூறி அரசாங்கம் தள்ளுபடியை நியாயப்படுத்தியது.

எந்தவொரு வங்கியின் மொத்தக் கடனில் ஆறு சதவீதத்தை விவசாயிகளுக்கு வழங்க வேண்டும், அதேசமயம் பல தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மற்றும் குறிப்பாக தனியார் வங்கிகள் இந்த விதியை முழுமையாகப் பின்பற்றவில்லை.

இது தேசத்திற்கு உணவளிக்கும் விவசாயிகளுக்கு எதிரான பாரபட்சம் இல்லையா?

விவசாயிகளின் கடனை தள்ளுபடி செய்ய வேண்டும் என பலமுறை கோரிக்கை விடுத்தும், கார்ப்பரேட் நிறுவனங்களின் ரூ. 7.4 லட்சம் கோடி கடன்களை தள்ளுபடி செய்ய தயங்காத இந்த அரசு, விவசாயக் கடன்களை தள்ளுபடி செய்ய மறுத்து வருவது இந்த ஒன்றிய அரசு எப்போதும் விவசாயிகளுக்கு எதிரான அரசு என்பதை மீண்டும் நிரூபித்திருக்கிறது.

தமிழ் நாட்டில் முதலமைச்சர் முக. ஸ்டாலின் ஆட்சியில் தமிழக அரசு கூட்டுறவு வங்கிகள் மூலம் ரூ. 7,000 கோடி விவசாயக் கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டது. கிட்டதட்ட 35.85 லட்சம் கோடி வட்டியில்லா கடன் விவசாயிகளுக்காக 2021 மே முதல் டிசம்பர் 2023 வரை வழங்கப்பட்டுள்ளது. மேலும் வட்டியில்லாக் கடன்களை தமிழ் நாடு அரசு தொடர்ந்து வழங்கி வருகிறது என்பதை நினைவூட்டுகி றேன்

கல்விக் கடனை நலத் திட்டமாகக் கருதி, கல்விக் கடனுக்கான வட்டியை ரத்து செய்ய வேண்டும். அதேபோல் வேலை கிடைப்பதற்கு முன் கடனை திருப்பிக் கேட்ககூடாது எனும் கோரிக்கையை ஒன்றிய அரசு பரிசீலிக்க வேண்டும்.

மாணவர்களின் நலனுக்காக கல்விக் கடன் வழங்கும் செயல்முறை எளிமைப்படுத்தப்பட வேண்டும்.

குடிமக்கள்தங்கள் சொந்தக் கணக்கில் இருந்து ஏடிஎம் மூலம் பணம் எடுப்பதற்கு அரசு கட்டுப்பாடு விதித்துள்ளது. கடந்த பத்தாண்டுகளில் குறைந்தபட்ச இருப்புத் தொகையை அவர்கள் உயர்த்தியுள்ளனர். எஸ்எம்எஸ்களுக்கும் கட்டணம் வசூலிக்கின்றனர். மக்கள் தங்கள் சொந்த பணத்தை எடுப்பதற்கு ஏன் தண்டக் கட்டணம் செலுத்த வேண்டும்?

டிஜிட்டல் மயமாக்கல் அதிகரிப்பால், பல பாதுகாப்பு சிக்கல்கள் ஏற்பட்டிருக்கின்றன. ரிசர்வ் வங்கியின் சமீபத்திய ஆர்டிஐ பதிலில், சைபர் மோசடி வழக்குகளின் எண்ணிக்கை 2023 நிதியாண்டில் 75,800 வழக்குகளில் இருந்து 2024 நிதியாண்டில் 2,92,000 வழக்குகளாக அதிகரித்துள்ளது என்றும், சுமார் 2024ஆம் நிதியாண்டில் மட்டும் இதுவரை இணைய மோசடிகளால் 2,056 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டிருக்கிறது.

ஆன்லைன் மோசடிகளால் அதிகம் பாதிக்கப்படுவது மூத்த குடிமக்கள் தான். மோசடி செய்பவர்கள் குறிப்பாக வயதானவர்களை குறிவைப்பதாக பல வழக்குகள் உள்ளன. சைபர் மோசடிகளில் இருந்து முதியவர்களை பாதுகாக்க சிறந்த இணைய பாதுகாப்பு நடவடிக்கைகளை உடனடியாக எடுக்க வேண்டும்.

கிராமப்புறங்களில், ஏ.டி.எம்.கள் வங்கிகளுக்குள் அமைந்துள்ளன. எனவே, மாலை 6 மணிக்கு வங்கி மூடப்பட்டால், மக்கள் ஏடிஎம் வசதியையும் இழக்கின்றனர். இது கிராமப்புறங்களில் உள்ள மக்களுக்கு கடுமையான சிக்கல்களை உருவாக்குகிறது என்று கூறினார்.

## தமிழ்நாட்டில்

# 3000 பட்டதாரி ஆசிரியர்கள் விரைவில் நியமிக்கப்படுவர்!

### திருச்சியில் – பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி பேட்டி!

திருச்சி, டிச. 8-

தமிழக துணை முதல்வர் மாநில இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 47வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு திருச்சி தெற்கு மாவட்ட, மாநகர, இளைஞர் அணியின் சார்பாக 47/3 மூன்றாவது நிகழ்வாக கழக மூத்த முன்னோடி களுக்கு பொற்கிழி வழங்கும் நிகழ்வு மாவட்ட கழக அலுவலகத்தில் மாவட்ட செயலாளர் பள்ளி கல்வித்துறை அமைச்சருமான அன்பில் மகேஷ் பொய்யாமொழி பொற்கிழிகளை வழங்கி சிறப்பித்தார். தலைமை மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் வெங்கடேஷ் குமார், மாநகர இளைஞரணி அமைப்பாளர் முத்து தீபக், நிகழ்வில் திருச்சி மாநகரச் செயலாளர் மண்டல குழு தலைவர் மதிவாணன், தலைமைச்செயற்குழுவண்ணை அரங்கநாதன், இந்நிகழ்வில் மாவட்ட மாநகர இளைஞரணி துனை அமைப்பாளர்கள் பாலமுருகன் ரவீந்திரன், தேசிங்கு ராஜா, பௌர்னாடிசாமிநாதன், விஷ்ணுவரதன், சையத் சாகிப், அல்லாஹ் பிச்சை, ரஞ்சித்,கண்ணன் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இறுதியாக நன்றியுரை மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர் சரத்குமார் நிகழ்த்தினார்.

நிகழ்வுகளை தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்த அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி. உதயநிதி ஸ்டாலின் 47 வது பிறந்த தினத்தை முன்னிட்டு ஏழை எளிய மக்களுக்கு குறிப்பாக தி.மு.க. மூத்த முன்னோடிகளுக்கு திருச்சி தெற்கு மாவட்ட இளைஞரணி சார்பில், நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது. உதயநிதி ஸ்டாலின் 47 வது பிறந்த தினத்தை மக்களுக்கு பயனுள்ள விதத்தில் கொண்டாடி வருகிறோம்.

தற்போது அரசுப் பள்ளி மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

எனவே மாணவர்களின் எண்ணிக்கையை கருத்தில் கொண்டு கூடுதல் ஆசிரியர்களை நியமிக்க வேண்டிய சூழல் எழுந்துள்ளது.

தற்போது PT Assistant 3000 ஆசிரியருக்கான தேர்வு நடத்தப்பட்டு சான்றிதழ்கள் சரிபார்க்கும் பணி நிறைவடைந்து அவர்களுக்கு பணி வழங்கப்படக் கூடிய சூழலில் ஆசிரியர் அல்லாத பணியாளர்கள்தங்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்ததன் காரணமாக 3000 பேரையும் பணி நியமனம் செய்ய முடியாத நிலை உருவாகி உள்ளது. இடைநிலைப் பள்ளி ஆசிரியர் காலிப் பணியிடங்கள் உள்ளது.

கடந்த 10 ஆண்டுகளாககண்டுகொள்ளப்படவில்லை. பணி நியமனத்தி ற்கான எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அவர்களுக்கும் சேர்த்தே தேர்வு நடத்தியுள்ளோம்.

முதல்வரின் உத்தரவை பெற்று அவர்களுக்கும் பணி வழங்கப்படும் என்று குறிப்பிட்டார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை, எழும்பூர், ராஜரத்தினம் மைதானத்தில் நடைபெற்ற தூய்மைப் பணியாளர்களை தொழில் முனைவோர்களாக மாற்றும் உன்னத திட்டம் 100 நவீன கழிவுநீர் அகற்றும் வாகனங்கள் வழங்கும் விழாவினை துவக்கி வைத்து நலத்திட்ட உதவிகளை வழங்கியதைத் தொடர்ந்து, அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் சுபம் மஹாலில் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் வழங்கினார். உடன் சிதம்பரம் நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர். தொல். திருமாவளவன், மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி, ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன், காட்டுமன்னார்கோவில் சட்டமன்ற உறுப்பினர் சிந்தனைச்செல்வன் மற்றும் பலர் உள்ளனர்.



நாகை மாவட்ட கழகம் சார்பில் நாகையில் அண்ணல் அம்பேத்கார்நினைவு நாளை முன்னிட்டு அம்பேத்கர் படத்திற்கு நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழக தலைவருமான என்.கௌதமன் தலைமையில்கழகத்தினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள். உடன் நகர கழக செயலாளர் இரா.மாரிமுத்து, எம்.ஆர்.செந்தில்குமார்,மாவட்ட அறங்காவலர் குழு தலைவர் நாகரத்தினம், மாவட்ட சிறுபான்மை நல உரிமைப் பிரிவு அமைப்பாளர் சாகுல் ஹமீது ராஜா, நாகை நகர கழகப் பொருளாளர் அபூபக்கர் மற்றும் நகர வார்டு நிர்வாகிகள் உள்ளனர்.